# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889)
ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Cey
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-சூச]  யாழ்ப்பாணம்:- நந்தன வரு தை மீ உஅ உ செவ்வாய்க்கிழமை (10 Feb. 1953)  [இல - அரு]


# "ஆற்றல் அடல்விடை"

## அறக்கடவுள் இடபமாய் அடைக்கலம் புகுந்தமை

எப்படியோ 'இந்துசாதன"த்துக்கு ஏதாவது எழுதியாகவேண்டும் என்ற கட்டாயம் எனக்கு ஏற்பட்டு விட்டது. கணந் தோறும் நிலைமை மாறுந் தன்மை யுடையதாகிய இவ்வுலகில் அறியாமையால் மூழ்கிக் கிடக்கும் எம்போன்றாது கருத்துக்கள் ..., பயன்படுமா? அன்றிப் பிழையற்றன என்றுதானும் சொல்லக் கூடியனவாக இருக்க முடியுமா? என்ற அபிப்பிராயத்தை இயல்பாகவே உடைய எனக்கு எந்த விஷயத்தில் எழுதுவ தென்பது தெரியாதிருந்தது! அந்நிலையில், என்னையறியாமலே எனது வாய் வழக்கமாகப் பாடிக்கொண் டிருக்கும் தேவாரங்களுள் ஒன்றாகிய "ஆற்றல் அடல் விடை ஏறும்" என்பதை முதலாகவுடைய சம்பந்தப்பிள்ளையாரது தேவாரத்தின் "ஆற்றல் அடல் விடை" எனனும் சொற்றொடர் என் கவனத்தை ஈர்த்தது. அச் சொற்றொடரின் தொடர்பாக என் மனத்தில் தோன்றிய அபிப்பிராயங்களையே இதன் பின்னர் கூறுகின்றேன்.

ஆற்றல் அடல் விடை என்பது மிகுந்த வலிமையுடைய இடபம் என்று பொருள்படும். இவ்வுலகத்தினை கண்ணையுள்ள மிருகவர்க்கங்களுள் எத்தனையோ மிருகங்கள் இடபத்திலும் பார்க்க மிகுந்த வலிமையுடையனவாகவும் பருத்த தோற்றமுடையனவாகவும் காணப்படுகின்றனவே; அப்படி யெல்லாம் இருக்க இடபத்தை மாத்திரம் [illegible]

சம்பந்தப்பிள்ளையார் ஆற்றல் அடல் விடை என்று விசேடித்திருப்பதும் தலைவராகிய சிவபெருமான் தமக்கு ஊர்தியாகக் கொண்டிருப்பதும் மிக மிக அதிசயமாக அல்லவா இருக்கின்றன? என்பன போன்ற வினாக்கள் இயல்பாகவே எழலாம். இந்நிலையில் [illegible] ஸ்கந்தபுராணத்தில் தக்ஷகாண்டம் ததீசி உததரப்படலத்தில் கூறப்பட்டிருக்கும் இடபத்தின வரலாறு கூர்ந்து [illegible]

முன்னொருஞான்று நிகழ்ந்த அக்கினிப் பிரளய முடிவில் அகில உலகமும் அக்கினியினால் உண்ணப்பட்டு சமயமாய்த் தோன்றிய அச்சூழலில் தலைவராகிய சிவபெருமான் தலைவியாகிய உமாதேவியார் காணும்படி 'திருநடனம்' செய்தருளினர். அத்தீயுப் பிரளயத்தினால் தன் உயிர்க்கும் அபாயம் நேர்ந்து விடுமோ என்று அஞ்சிய நிலையில் நின்ற அறக்கடவுள் அத்திருநடனத்தைக் கண்ணுற்றனன். தனக்கு ஒரே ஒரு புகலிடம் அத்தலைவரது

அளவைச் சிவனடியார்
வரைவது

திருவடிகளே என்று வரித்துக் கொண்டான். இடபத்தின வடிவத்துடன் சென்று, 'தேவரீர் என்னைக் காப்பாற்றியருள வேண்டும்; என்னை ஊர்தியாகக் கொண்டு என் மேல இவர்ந்தருள வேண்டும்' என்று இரந்து நின்றான். கருணாகரராகிய சிவபெருமான் அதற்குச் செவிசாய்த்தருளி அதனைத் தாங்கும் பொறுட்டு அவ்விடபத்துக்கு அநுக்கிரகித்து, அதனைத் தன் வாகனமாக ஏற்றுக்கொண்டார்.

(தொடரும)

# சைவச் சிறாரின் கல்வி உரிமை

## மத மாற்றத்தைத் தடுக்க முடியாதா?

ஞானதானம் செய்தல் நாம் செய்யும் பெரும பணி — இது ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருந்தகையின் கருத்துமாகும் .... .... ....

ஞானம் பெருக நற்கல்வி வேண்டும்! கல்வியின்றேல் மக்கள் மாக்களின் நிலையிலிருந்து உயர முடியாது!! உயர வழியே இல்லை!!!

நம் சைவ மக்களிடையே கல்வி கற்க வழியின்றி மாக்களின் நிலையிலிருந்து உயர வகையறியாத சிகோதரர்களும் உளர்.

அவர்களை "நல்லவழிகாட்டுவோம்; உடு புடவை சப்பளம் நாளுங் காளுந் தருவோம்" எனக் கூவி அழைக்கப் பலர் காத்திருக்கின்றனர். ......... அவர்களும் அல்லற் பட்டு ஆற்றாது இவ்வுலக இன்பங்களின்பொருட்டு அன்னாரிடம் சரண் புகுகின்றனர்

அவர்களைக் "காக முறவு கலந் துண்ணக் கண்ட" நம சைவப் பெருமக்கள் அழைத்துத் தம் அளப்பரும் அருட் கடலில் திளைக்கச் செய்ய ஆவன செய்யவேண்டாமோ? அதற்கு முதற்படி அத்தாழ்வுற்ற பாமர மக்களுக்கு எழுத்தறிவித்தல அல்லவா?

அதைச் செய்ய முன் நிற்பது நாவலர் நாள் தொடங்

"சாவகச்சேரி-ஊவரவன்"

கிச் சைவ வித்தியாசாலை யமைத்து நடாத்துபவர்கள் தொண்டமையன்றோ. சைவ வித்தியாவிருத்திச் சங்கப் பாடசாலையொன்று சாவகச்சேரியில் தொடங்கி அங்கே ஆண்டுகளாகியும் அக்

கிராமத்தைச் சார்ந்த சின்னமடு வடி (ஹரிஜன) மக்கள் பலர் இன்றும் அனுமதிக்கப்பட்டிலர்! அவர்களுக்குக் கிறிஸ்தவர்கள் கல்வி புகட்டி வருகின்றனர். அதோடு இயல்பாக மதமாற்றமும் நடந்து வருகின்றது. சுந்தி இந்துக்கள் கிராமச் சங்கத் தேர்வுக்கு மட்டு அவர்களைத் தரிசிப்பர். முன்னாட்களில அரிசி அவித்து அன்னம வழங்கி அவர்களைக்குச் சமமத்தைப் பெற்றனர்; இக்காலில அஃது இடலாது என அறிவர். ஆனால் அவர் தம கல்விக்கு ஆவன செய்யும விஷயத்தில் பின் நிற்கின்றனர். தம சிறுவருடன் ஹரிசனச் சிறார் சேர்ந்து படிக்கலாகாது என்கின்றனர் இதற்காக முயலும ஆசிரியரையும் தூஷிக்கின்றனர். அவர்களுக்குப் புறம்பான பாடசாலை தாபிக்க முயன்றார்களா? அதுவும் இல்லை.

நாவலர் நாமம் போற்றுபவர், சைவ நன்மக்கள் என்று தம்மை அழைக்கும் அவர்கள், தம் அறம் எது? என்று சிந்தித்து அறிவார்களாக.

என் பிறவியை வேரொடுங்களைந் தாண்டுகொள்....!

திருச்சிற்றம்பலம்.

மடலைவென் வல்வினைக் காட்டைநின் மன்னருட் டீக்கொளுவும்
விடலைவென் றன்னை விடுதிகண் டாயென் பிறவியைவே
ரொடுங்களைந் தாண்டுகொளுத்தர கோசமங் கைக்கரசே
கொடுங்கரிக் குன்றுரித் தஞ்சுவித் தாய்வஞ்சிக் கொம்பினையே.

திருச்சிற்றம்பலம்.

### வியாவிலில் காந்தியடிகள் தினம்

கடந்த வெள்ளிக்கிழமை (30-1-51) காரைநகர் வியாவிற் சைவபரிபாலன வித்தியாலயத்தில் மகாத்மா காந்தியடிகளின் ஞாபகார்த்தக் கொண்டாட்டம் நடைபெற்றது அவ்வமையம் ஷெ வித்தியாசாலைத் தலைமையாசிரியர் பண்டிதர் சு. இராமசாமி அவர்கள் பேசும்பொழுது காந்தியடிகளின் உயரிய உத்தம வாழ்க்கை நலன்களை எடுத்துரைத்து அகிம்சை, சத்தியம் என்னும் உயரிய கொள்கைகளை ஆயுதங்களாகத் தாங்கி, உலகத்தில் நடைபெறும் யுத்தமெனனும் கொடிய அக்கிரமத்தை நீக்குவதற்கு, உத்தம வாழ்க்கையை நடத்தி உலகிற்கு உரிய வழிகளைக் காண்பித்தாரெனக் குறிப்பிட்டார்,

### மாதகல் மேற்கில் சுதந்திர ஞாபகம்

மாதகல் மேற்கு ஜனசமூக நிலைய முன்றலில் செல்வன் ஆ. பொன்னமபலம் மற்றும் சிறுவர்களினதும் உதவியுடன் வெண்மை, மஞ்சள், பசுமை முதலான கொடிகளையும் கொக்கிட்டு ஓர் நிழல் மாதகைகாட்டவே 'உச்சாணிக் கொப்பினிலே ஏறிவிட்டார் மூவர்ணம், நாமார்க்கும் இனி அடிமை இல்லை" என்று வேறும் பல இசை மொழிகளினாலும் சிறுவர்கள் இசைவிருந்தளித்தனர்.

"ஆண்டு பலவாக நம்மை அடிமையாக்கி அதிகாரம செய்துவந்த வெள்ளைப் பேய்கள் பூண்டற்றுப் போம்படி செய்தழகினோடு புதுமை பெறும் மூவர்ணக் கொடியைக் காணீர்" எனக் காந்தியடிகளை நினைந்து நினைந்து நம் தாய் நாட்டிய நாற்பதுகோடி இந்திய மக்களும இவ்விசைகளைப் பாடி மகிழுகிறார்கள்.

இவ்விதமே நமது நாட்டிற் கும்பூரண சுதந்திரம் அமைதல் சிறுவர்களாகிய உங்கள் ஒவ்வொருவரினதும ஊக்கத்தையும் தேசத் தொண்டையும் பொறுத்ததே என்பதை கிளைவிளிருத்தும்படி கூறி இன்று சிறுவர்களாகிய நீங்கள் இந் நிழல்மாதத்தை நாட்டியது மிகவும் விரும்பத்தக்கது. இது போல் ஒவ்வொரு காரியத்திலும் ஊக்கமாக "கருதிய முடித்துவாழும்" உங்கள் ஒவ்வொருவரினதும் உற்சாகத்தையும் மெச்சுவதாக திரு. அம்புதலிங்கம் அவர்களாற் கூறப்பட்டது. சிறுவர்களுக்கு தெல்லிக்கண் வழங்கப்பட்டது.

### மறவன்புலோவிற் சுதந்திர தினம்

கி மு. சங்கம், ச. ச. நிலையம் என்பவற்றின் ஆதரவில் மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலையில் 4-2-53 புதன் முற்பகல் 9 மணியளவில் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டபோது தலைமை ஆசிரியர் திரு. ரா. பொன்னம்பலம் அவர்கள் அத்தகைய கொண்டாட்டங்களாலாம் பலன்களைப்பற்றி விளக்கிப்பேசினர். ஆரம்பத்தில் மாணவ மாணவிகளின் அணிவகுப்புக் காட்சி அழகாக நடத்திக் காண்பிக்கப்பட்டது. மாணவர்களிடையே விளையாட்டுப் போட்டியும் நடைபெற்றது. எல்லா விளையாட்டுகளிலும காந்திக் கட்சியினரே வெற்றிபெற்றனர்.

பொதுக் கூட்டத்திற்குத் தலைமைவகித்த திரு. க. வேலுப்பிள்ளை அவர்கள் விடுதலை பெற்ற இலங்கையைப் பற்றிக் குறிப்பிட்டனர்.

### விழிசிட்டிச் சிவகுருநாத சுவாமி கோயில் உற்சவம்

நிகழும் நந்தன வரு தைமீ 6-ந் திகதி (8 2-53) ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பழை தென்மேற்கு விழிசிட்டி சிவகுருநாதசுவாமிகோயிலில் உற்சவம் ஆரமபமாகி மாசிமீ 11உ (22-2-53) ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவத்துடன் பூர்த்தியாகும். மறுநாள பிராயச்சித்தமும் மாகேஸ்வர பூசையும் நடைபெறும்.

### வேதாகம நூல் நிலையம்

நிகழும் நந்தன வரு தை மீ 24 உ வெள்ளிக்கிழமை 6-2-53 மாலை யாழ்ப்பாணம் மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமிகோவில் மேலைவீதியில் உள்ள 'பிரம்மாலயத்தில் குமாரசுவாமி குரு அவர்கள் ஞாபகார்த்தமாக ஷெ குருமணியின் நூல்கள் (அச்சுபிரதிகள்; ஏட்டுப் பிரதிகள், பததிகள) பழனி வேதாகம பாடசாலைத் தலைமை ஆசிரியரும் சித்தாந்த பண்டிதருமாகிய சித்தாந்தசரபம காசிவாசி சிவஸ்ரீ ஈசானசிவாசாரியார் அவர்களால் வேதாகம சைவ சித்தாந்த நூல் நிலையம் எனனும பெயருடன் திறந்து வைக்கப்பெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே

இந்துசாதனம்
யாழ். நந்தன ஹூ தை மீ உஅ௨ செவ்வாய்க்கிழமை

## சமயக் கல்வியில் சபையாரின் ஊக்கம்

—0—

உலகில் அமைதி நிலவ வேண்டுமானால்—இல்லை ஒவ்வொரு இல்லத்திலும் நல்லெண்ணம் பரவவேண்டுமேயானால் — இன்றைய கல்விமுறை புதுக்குவித்து இறைஉணர்ச்சி எழுப்பக் கூடியதானவகையில் அமைக்கப்பட வேண்டுமென்று அரசியல் அறிஞர்களே கருதுகின்றார்கள் என்றால் சமய வளர்ச்சிக்காக நிறுவப்பட்ட சபைகள் எவ்வளவுக்கு இத் துறையில் ஈடுபட வேண்டும் என்பது சொல்லாதே அமையும்.

'சைவ சித்தாந்த சரபம்' என்ற புகழ்புனையப்பெற்ற தென்னிந்திய வேதாகமக் கழகத் தலைமை ஆசிரியர் சிவஸ்ரீ ஈசான சிவாச்சாரியார் அவர்கள் யாழ்நகரிற் சைவ பரிபாலன சபையாரின் அழைப்புக் கிணங்க சைவாச்சிரம நாவலர்மண்டபத்தில் சிவஞானபோதச் சொற்பொழிவாற்றித் தெய்வப்பணி செய்துவரும் இவ்வமையத்தில் பள்ளிக்கூடத் தலைவர்களும் ஆசிரியர்களும் இப்பெரியாரொடு சைவ அறிவை கல்விக் கழகங்களிற் பிள்ளைகளுக் கெவ்வாறு பயன்படக் கற்பிக்கலாமென்று கலந்துரையாடி அவரின் ஆழ்ந்த அநுபவம் மிக்க மதிமொழிகளைப் பெற்றுக் கொள்ளுவான் கருதி இச் சபைச் செயலாளர் திரு அ. அருளம்பலம் அவர்கள் ஒரு ஆலோசனைக் கூட்டத்தை அடுத்த ஞாயிற்றுக்கிழமை அன்று வண்ணை வைத்தீசுவர வித்தியாலய மண்டபத்தில் நடத்துவதற்காகக் கல்விக்கழக ஆசிரியர்களையும் ஆசிரியர் சங்கச் செயலாளர்களையும் அன்புடன் அழைத்திருக்கின்றார்.

காற்றுள்ள பொழுது கருமம் ஆற்றுவர் அறிஞர். ஆகவே இவ்வாறு யாழ்நாட்டிற்கு இறைஅருளால் உதவப்பெற்ற நல்லமையத்தைச் செவ்வனே உபயோகித்துச் சைவப் பிள்ளைகள் உரியமுறையிற் கல்வி பயில்வதோடு சைவ அறிவைப் பெற்று உலகமுய்ய வழிதேடுவதற்கான தெய்வப் பணியை ஆற்ற அறிவுடையார் ஒருபொழுதும் பின்னிற்க மாட்டார் என்று எண்ணுகின்றோம்!

# முந்நீர் முற்றத்தில் அரசிள மகளிர் விளையாட்டு - மானுடவாலிபஉருவ அமைப்பில் மனம் வைத்த மங்கை

## ★ நீரர மங்கையர் ★

— 2 —

மாளிகையைச் சூழ்ந்து அழகிய ஒரு பெருந்தோட்டம் உண்டு. அது சிவப்பும் நீல நிறமும் இடத்துக்கிடம் கலந்து விளங்குகின்ற சோலைகளை உடையது. அதன் மரங்களில் தூங்கும் பழங்கள் பொன் போல ஒளிரும். அவற்றின் இலை நெருப்புக் கொழுந்து போல அழகாய் இருக்கும். அங்குள்ள ஏனைய பொருட்கள் போலவே இவையும் எப்பொழுதும் அசைந்தவண்ணமாகவே இருக்கும். நிலமெங்கும் தெள்ளிய சிறு மணல். அது மங்கலான நீலநிறமுள்ளது. அவ்விடம் முழுவதும் ஒருவகையான நீலநிறம் படர்ந்திருக்கும். அங்கு நின்றால், இயல்புடைய சவுக்கமரமொன்றையும் அதற்கருகில் நாட்டினள். அம்மரத்தின் கிளைகள் மிக உயர்ந்து வளர்ந்து, பின்னர் வளைந்து நிலத்தை அளாவின. நில மண்டலத்திற் காற்றுண்டாக அதனால் நீர் அசையும்போதெல்லாம் அவற்றின் மங்கலான சாயல் அங்குமிங்கும் அசைந்து கொண்டிருக்கும். அம்மரத்தைப் பார்ப்பவருக்கு அதன் கிளைகள் அடிமரத்தை அடிக்கடி கொஞ்சிக்கொண்டிருப்பதுபோலத் தோன்றும்.

நில உலகத்து வாழும் மனிதரைப்பற்றி அறிவதற்கு அச் சிறுமிக்கு மிகுந்த ஆசை. அங்குள்ள மரக்கலம், பட்டினம், மனிதர், விலங்கு முதலியவை

### கலைமாணி. க. கணபதிப்பிள்ளை அவர்கள்
### இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர் ஆக்கியது.

ஒருவனுக்குப் பூமிக்கு மேலே அதியுயரத்தில் நாலுபக்கமும் வானம் சூழ்ந்த காற்று மண்டலத்தில நிற்பது போன்ற உணர்ச்சி உண்டாகும். கடலின் அடியில் இருப்பதாக உணரமாட்டான். காற்றின்றிக் கடல் அசைவற்று இருக்கும் வேளை சூரியனை ஆங்கிருந்து பார்த்தால், அது சிவந்த கதிர்களைக் காலுகின்ற கிண்ண வடிவுள்ள ஒரு செம மலர்போலத் தோன்றும்.

விரும்பியவண்ணம் செடி கொடி நடுவதற்கும அவற்றிற்கு வேண்டிய வெவ்வேறு வேலை செய்வதற்கும் ஒவ்வொரு அரசகுமாரத்திக்கும் தோட்டத்துள் ஒவ்வொரு பாகம் உண்டு. ஒருத்தி தன் பாகத்தைத் திமிங்கில வடிவாய்ச் செய்திருந்தனள். மற்றொருத்தி ஒரு சிறிய நீரமகள்போற் செய்திருந்தனள். அவருள் ஆக இளையவள் தனது பாகத்தைச் சூரிய வடிவுபோல் அமைத்து அது போல் ஒளியுடைய சிவந்த மலர்களை வைத்து அலங்கரித்திருந்தனள். அவள் தனது சகோதரிகளைப்போன்றவள் அல்லள். அவளின் செய்கையும் குணமும் அவரின் வேறானவை. சாந்தமும் ஆழ்ந்த யோசனையும் அவளிடம எப்போதும் குடிகொண்டிருந்தன. நடுக்கடலில் உடைந்த கப்பல்களிற் பொறுக்கிய பல புதுப்பொருட்களை அவள் சகோதரியர் வைத்து விளையாடுவர். ஆனால் அவளுக்கோ அத்தகைய பொருட்களில் விருப்பமில்லை. சூரியன்போல் வடிவுடைய சிவந்த பூக்களும் ஒரு மானுட வாலிபனைப் போலச் சலவைக் கல்லினாற் செதுக்கி அமைத்த ஓர் அழகிய உருவமுமே அவள் மனதைக் கவர்ந்தன. இவ்வுருவம் கடலிற் கண்டெடுக்கப்பட்டது. இதைத் தனது தோட்டத்தில் நாட்டிவிட்டு, தன் கிழக்கிழ்த் தனிமை[illegible] போர் யாவருக்கும் [illegible] உணர்ச்சியைக் கொடுக்கும் களைப்பற்றி அவள் பாட்டி, தானறிந்த அளவில் அவளுக்குச் சொல்வதுண்டு. பூக்களுக்கு நறுமணம் உண்டென்பதும் - கடற்குளிருக்கும் பூக்களுக்கு மணமிலலை - காடுகள் பசுமை செறிந்து விளங்குமென்பதும் அக்காடுகளிலுள்ள மரக்கிளைகளுக்கூடாக மீனகள் செவிக்கு இனிமையும் உள்ளத்துக்கு மகிழ்ச்சியும் கொடுக்கும் பாட்டுக்களைப் பாடிக்கொண்டு அங்குமிங்கும பறந்து திரியும் என்பதுமே அவளுக்கு மிகுந்த வியப்பைக் கொடுத்தன. அவள் பாட்டி மீனென்று இங்கே குறித்தது பறவைகளை. சிறுமி விளங்கிக் கொள்வதற்காக மீனென்றாள். ஏனெனில் அச் சிறுமி இன்னும் பறவைகளைக் காணவில்லை.

'உனக்குப் பதினைந்து வயதாகிய பின்னர், நீ கடலின் மேற்புறத்துக்குப் போய் நிலா எறிக்கும் நேரங்களில் அங்குள்ள கற்பாறைகளிலிருந்து நிலா வெளிச்சத்தில் அசைந்தசைந்து ஓடிச் செல்லும் பெரிய கப்பல்களையும் காடுகளையும் அங்குள்ள பட்டினங்களையும் பார்க்கலாம்." என்று பாட்டி சொன்னாள்.

இன்னும் ஓர் ஆண்டு முடிய அவர்களில் மூத்தவள பதினைந்து வயதினளாவாள். ஒவ்வொரு சகோதரியும் ஒவ்வோர் ஆண்டிற்கு இளையவள். அச் சிறுமியோ ஆறாவது குழந்தை ஆதலின் கடலின் மேற்புறத்துக்குப் போய்ப் பூவுலகத்தைப் பார்ப்பதற்கு இன்னும் ஆறு ஆண்டுகழிய வேண்டும். இவ்வண்ணமிருக்க, மூத்தவளுக்குப் பதினைந்து வயதானது அப்போது அவள் மறைச் சகோதரியரைப் பார்த்து, "நான் கடலின் மேற்புறத்துக்குப் போய் முதன் முதல் அங்கு எந்தப் பொருளைக் காண்பேனோ அதைப்பற்றி உங்களுக்குத் திரும்பி வந்தவுடன் விரிவாகச் சொல்லுவேன்" என்றாள். ஏனெனில் பாட்டி அவருக்குப் போதிய அளவு உலகத்துப் பொருட்களைப்பற்றிச் சொல்லவில்லை. ஆதலால் அனேக பொருட்களைப்பற்றி அறிவதற்கு ஆசை கொண்டிருந்தனர்.

(வளரும்.)

## எமது அறிவித்தல்

வருகிற வியாழக்கிழமை (12-2-53) சிவராத்திரி புண்ணிய தினமாகலின் சைவப் பிரகாச அச்சியந்திரசாலை, இந்துசாதன அலுவலாளர்களுக்கு அடுத்த நாளாகிய வெள்ளிக்கிழமை விடுமுறை நாளாகும். ஆகலின் (13-2-53) வெள்ளிக்கிழமை ஆங்கில இந்துசாதன வெளியீடுகள் வெளிவரா என்பதை அபிமானிகளுக்கு அறியத்தருகின்றோம.

—அதிபர்.

## மகாசிவராத்திரி விசேட பூசை புராணப்படிப்பு

வண்ணார்பண்ணை, காட்டுத்துறைத் தலத்தில் எழுந்தருளிய ஸ்ரீ நடராச மூர்த்திக்கு சிவராத்திரி புண்ணிய தினமாகிய வருகிற வியாழக்கிழமை (12-2-53) இரவு விசேடபூசை, சகஸ்திரநாம அர்ச்சனை, சிவராத்திரிமான்மியச் சருக்க படனம முதலியன நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

## சிவதீட்சை

நிகழும் நந்தனஹூ மாசிமீ கஉ (12-2-53) வியாழக்கிழமை சிவராத்திரித் தினமாகிய புண்ணிய தினத்தன்று மு. ப. 8 மணியளவில் திருவருளை முன்னிட்டுப் பழனி வேதாகம பாடசாலைத் தலைமையாசிரியரும் சித்தாந்த பண்டிதருமாகிய காசிவாசி சிவஸ்ரீ ஈசான சிவாச்சாரியார் அவர்கள் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாதரவில் ஷெ சபையினது சைவாச்சிரம நாவலர் மண்டபத்தில் அன்பர்களுக்குச் சிவதீட்சை செய்துவைப்பார்கள். அதனைப் பெற விரும்புவோர் ஆசாரசீலராய்க் குறித்த இடத்துக்கு வந்து சேர்வார்களாக.

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்,
சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம்
9—2—53.
M. 246 10—2—53.

## உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

இவ்வாரப் பலன்கள் 15—2—53——21—2—53

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

மன அமைதியில்லை; செலவு அதிகம். உறவினராலேதொந்தரவுண்டு. நற்காலம் உதிக்குமாகையால் எண்ணி எண்ணிக் கவலைகொள்ளவேண்டியதில்லை.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

காரியங்களைக் கொண்டுநடத்துவதில் இவ்வாரத்திற் சுலபம். நண்பர் உறவினர் உதவுவார்கள். வாரம் முடியுமுன் தொழில் சம்பந்தமான நற்செய்தி கிடைக்கும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3 4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

எதிர்காலத்தை நன்னிலைப்படுத்தக்கூடிய நற்செய்தி இவ்வாரம் எதிர்பார்த்தவகையிற் கிடைக்கும்; இதன் பயனாக நீர் ஓய்வில்லாதுழைக்கநேரிடும்; பணநிலைசெம்மையடையும். ஆனால் வரவுக்கு மிஞ்சிய செலவாகாது.

**கடகராசி** புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.

ஞாயிற்றுக்கிழமை மனநிலை குழப்பமடையும், மாத முடியும்வரையும் [illegible] [illegible] பதனால் கெடுதல்நேரிடாது. எனினும் அவதானம் எதிலும்இருத்தல் வேண்டும்.

**சிங்கராசி** மகம், பூரம், உத்திரம, 1ம் பாதம்.

புதன்காலை வரை கருமங்களைக் கொண்டு நடத்துதல் வில்லங்கமாயிருக்கும். மனக்குழப்பமும் சிறு உத்தியோகத்தொந்தரவும் எழக்கூடும். எக் கருமத்திலும் கவனமாயிருக்கவும். மற்றைய நாட்களில் நன்மை உண்டு.

**கன்னிராசி** உத்திரம் 2 3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

குடும்பச்சூழலில் தப்பபிப்பிராயம் ஏற்படக்கூடும். வசைப்பேச்சுக்கிடமுண்டு. கவனமாயிராதுவிட்டால் மற்றவர்களின் சூழ்ச்சிக்காளாகவேண்டிவரும். புதன் வியாழம் வெள்ளி மனநிலையிற் குழப்பம் ஏற்படக்கூடும்.

**துலாம்** சித்திரை 3,4ம் பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்.

வெள்ளி சனி தவிர ஏனைய நாட்கள் நற்பலன் கொடுக்கும், எத்துறையிலும் புகழும் சித்தியும் கைகூடும். வார இறுதியிற் குடும்ப அலுவல்களிற் குழப்பமுண்டாகலாம்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அனுஷம், கேட்டை.

நற்பலன் எய்தவேண்டுமெனின் அதிகம் சிரமம் எடுத்தல்வேண்டும். பணநெருக்கடிதோற்றும். உடல்நலமும் அவதானிக்கப்பட வேண்டும் குடற்கோளாறுகள் உண்டாகலாம்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1 ம் பாதம்.

பணத்துறையில் நல்ல காலம். இனத்தவர்நண்பர் ஆகியோருடைய உதவிநிச்சயம். வாரஇறுதிக்குமுன் சில நீண்ட காலச்சிக்கல்கள் நீங்கும் போட்டியிடுவோரை வெல்லலாம்.

**மகரராசி** உத்தராடம் 2,3,4ம் பாதம்திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

இந்தவாரம் அதிகமனச்சமாதானமிருக்கும். கல்வித்துறையில் சித்தியும் புகழும் நிச்சயம். புதுமுயற்சிகள் விரும்பின பலனைத் தரும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.

உமதுமுயற்சியில் அதிக முன்னேற்றத்தைக்காண்பீர். எதிர்பாராத வருமானம்புகழ், நண்பருதவி ஆகிய வைநிச்சயம்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

முன்பு இட்டமுதல் இந்தவாரம நல்லபலனைத் தரும். முதிர்ந்த இனத்தவர் சிலகடினமான காரியங்களிலிருந்து நீங்கஉதவிசெய்வர். மனச் சமாதானமும் நிச்சயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமயக் கல்வி முறை

# ஆலோசனைக்கூட்டம்

இப்பொழுது யாழ்நகரிற் சைவப்பிரசங்கம் சிவஞானபோத வகுப்புக்கள் நடத்திவரும் சிவஸ்ரீ ஈசான சிவாசாரியாரவர்களுடன் கலந்துரையாடிச் சைவசமய பாடஞ் சற்பிக்கும் முறையை ஆராய்ந்து ஆவன செய்வதற்கு பள்ளிக்கூடத் தலைவர்களையும ஆசிரியர்களையும் வண்ணை வைத்தீசுவர வித்தியாலய மண்டபத்தில் (15-2-53 ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்குச் சமுகந்தரும்படி சைவபரிபாலனசபைச் செயலாளர் திரு. அ. அருளம்பலம் அவர்கள் அழைத்திருக்கின்றார்கள்.

சமயக்கல்வியின் இன்றியமையாமையை உணராதாரில்லையாதலின் இக்கூட்டம் இனிது நிறைவேறிச் செய்கை முறையிலித் தெய்வப்பணி புரிய அழைக்கப்பட்ட அன்பர்கள் உதவி புரிவார்களாக.

# வேதாகம நூல் நிலையத் திறப்புவிழா

## சிவஸ்ரீ ஈசான சிவாச்சாரியாரின் வேதாகம விளக்கம்

6-2-53 அன்று மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோயிலின் மேலை வீதியில் பிரம்மஸ்ரீ குமாரசாமிக்குருக்கள் அவர்கள் ஞாபகார்த்தமாக நிறுவப்பட்ட வேதாகம நூல் நிலையத் திறப்புவிழாவில் காசிவாசி சிவஸ்ரீ ஈசானசிவாச்சாரியர் அவர்கள் நிகழ்த்திய பிரசங்கத்தின் சாரம்:-

### வேதாகமம்

வேதாகமங்களைப்பற்றி இக்காலத்தில் விளக்குவது மிகவும் அவசியமாகும். இவை சைவசமய முதல் நூல்கள். போக்குவேறுயுள்ள வேற்றுச் சமயத்தவர்களும் தங்கள் சமய நூல்களுக்கு இப்பெயர்களில் விருப்பங்கொண்டு இக் குறியீட்டை வழங்குகின்றார்கள். சைவசமயிகள் இதனைச் சிந்தித்துப் பெருமையடைய வேண்டும்.

கடவுள் படைப்புக் காலத்தில் முதலில் நாத ரூபமாக வேதாகமங்களை அருளிச் செய்தார். அதன் பின்பே ஆன்மாக்களுக்கு தனுகரண புவன போகங்களைத் தோற்றுவித்தார். இறைவன் அநிருக்குமசித்தாயுள்ளவர். ஆன்மா அலசித்தாயுள்ளது. இறைவன் அதன ஆன்மபோகத்தை நீக்கி அதற்குச் சிவபோகத்தை அளிப்பதற்காக வேதாகமங்களை அருளிச்செய்தார். வேதாகமங்கள் இறைவனுக்குஉயிர்ப்பாக உள்ளன. அவற்றில் இகபரசாதனங்கள் கூறப்படுகின்றன. ஆன்மாக்கள் பாசத்தடையை நீக்கும்பொருட்டு வணங்குகின்ற கிரமத்தையும் கூவனே அவற்றில் அருளிச் செய்தின்றன். இறைவன் அருளிச்செய்த வேதங்கள் நான்கு ஆகமங்கள் இருபத்தெட்டு, உபாகமங்கள் இருநூற்றேழு. இவற்றைச் சிவபெருமான் நேரே அருளிச்செய்யவில்லை எனவும் அறிஞர்களாற் செய்யப்பட்டனவெனவும் சிலர் கூறுகின்றார்கள். அது தவறு அநாதியாகவே பாசசம்பந்தமில்லாத இறைவனே அவற்றைச் செய்தார் அநாதியாகப் பாசசம்பந்தமுள்ள ஆன்மாக்கள் அவற்றைச் செய்திருக்க முடியாது. இதற்குச்சான்றாகத் திருமூலர் திருவாக்கை நோக்குக.

"வேதமொடாகமம்
மெய்யா மிறைவனூல்
ஓதும் பொதுவும்
சிறப்புமென் றுள்ளுக
நாத னுரையிவை
நாடி லிரண்டந்தம்
பேதம தென்னிற்
பெரியோர்க் கபேதமே."

வேதாகமங்களிற் சரியை கிரியை யோகம் ஞானமாகிய நான்கு பாதங்களும் தீட்சா முறைகளும் கூறப்படுகின்றன. ஆன்மாக்கள் அவை அருள்வழி ஒழுகுவதற்கு இவை துணைசெய்வன.

'ஆட்டுத்தேவர் தம் விதியொழித்து அன்பால் ஐயனே என்றன் பால் இருப்பன்' என மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தில் அருள் வழி நிற்றலைக் கூறுதல் நோக்குக.

வடமொழி வேதசிவாகமங்களில் உள்ள உண்மைகள் இலைமறைகாய் போலப் பன்னிரு திருமுறைகளில் கூறியிருப்பக் காணலாம். செந்தமிழ்வல்லார், வடமொழி பயின்று வேதசிவாகமங்களின் பொருளைக் காணுதல் வேண்டும். வடமொழி வல்லார் செந்தமிழ் பயின்று பன்னிரு திருமுறைகளின் கருத்தைக் காண முயலுதல வேண்டும். இங்ஙனம் இருசாராரும் செய்யின் வடமொழி தென்மொழிப் பூசல் நீங்கிவிடும். சைவமக்கள் சைவ உண்மைகளை உணர்ந்து ஒழுகத் தலைப்படுவர். ஈழநாட்டுத் திருநெல்வேலியிலே தோன்றிய ஞானப்பிரகாச சுவாமிகள் வடமொழியிலும் தமிழ் மொழியிலும் வல்லுநராகி வேதசிவாகமங்களின் பொருளையுணர்ந்து வடமொழியிலும் தமிழ் மொழியிலும் அரிய நூல்கள் இயற்றினர். வடமொழியில் அவர் இயற்றிய நூல்கள் சித்தாந்த சிகாமணி பிரமாணத்தீபிகை முதலியனவாகும். சிவஞானசித்தியாருக்குத் தமிழில் ஒருரை எழுதினார். இவரைப் போன்று தமிழ்மக்கள் வடமொழி தென்மொழித்துவேஷமின்றி இருமொழிக்கும் தொண்டாற்ற முன்வரவேண்டும்.

வேதசிவாகமங்களின் கருத்துக்களை ஆங்கில மொழிபெயர்ப்பு மூலம கற்று அறிய நம்மவர் முயலுதல் விபரீதங்களை உண்டாக்கும். நம்நாட்டிற் பிறந்தவர்களே சில சமயங்களிற் பிழைபட அவற்றின் கருத்துக் காண்பாராயின், சைவ சமய சம்பிரதாயங்களையும் ஆசாரங்களையுமறியாத பிற நாட்டவர்கள் எங்ஙனம் அவற்றின் கருத்தைப் பிழையற வெளியிட முடியும்? வேதங்களின் பொருளை ஆகமங்களைக் கற்றே அறிதல் வேண்டும். வேதங்களின் விரிவே ஆகமங்கள். 'வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க' 'வேதப் பயனாம் சைவமும்போல' எனச் சேக்கிழார் சுவாமிகள் கூறியன இதனை வற்புறுத்தும்.

வேதசிவாகமங்கள் சிவனையே முழுமுதற் கடவுளாகக் கொள்வன. நாலாவது வேதம் அதர்வம் எனவும் அதன் முடிபு அவர்வசிரசு எனவும், அதன முடிபு [illegible] யெனவும் கொள்ள[illegible] விடத்திற் சிவனே பரம்பொருள் எனக் கூறப்படுகின்றது. "பொது நீக்கித்தனை நினைய வல்லார்க்கு என்றும் பெருந்துணையை" என அப்பர் சுவாமிகள் கூறுவதும் இவ்வுண்மையையே.

பிற தேசத்தவர்கள் பாரத நாட்டைத் தம் ஞானமுலர்ந்த நாவைக் கொண்டு நாடுவது இந்நாட்டின் உள்ள வேதசிவாகமங்களின் பெருமையினாலும் அவற்றிற் காணப்படும் ஞானப்பொருளை யடைவதற்காகவும் எனச் சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளாரென்பதனை யிவ்விடத்திற் சிந்திக்கவேண்டும். பிற நாட்டவர் இந்தியாவை மதிப்பது அதன் தோளவலிக்கும் தாள் வலிக்குமாகவல்ல, அங்குள்ள வேதசிவாகமங்களுக்காகவே.

இந் நூல் நிலையத்தைப் பிரம்மஸ்ரீ பாலசுந்தரக் குருக்கள் உரிமைக்காரர் சார்பாக நிறுவமுன்வந்தமையை யான் பாராட்டுகின்றேன். இங்குள்ள நூல்கள் தமக்கும் பிறருக்கும் பயன்படும்பொருட்டே இவ்வண்ணம் செய்துள்ளார். [illegible] பயன்படுத்திக் கொள்வார்களாக.

# அரன்பணிக்காகும் திருநாள்

## மகா சிவராத்திரி விரத மாண்பு

### மாசி 1-ந் திகதி வியாழக்கிழமை (12-2-53)

ஓங்குமொரு மருப்பானை யுயிர்க்குயிரா யிருப்பானை யுரகவேந்தன்
றங்குநெடு நிலத்தானை முகத்தானை வதைத்தானைச் சயிலமானைப்
பாங்கு வைத்து மழுத்தானை பரித்தான்றந் தளித்தானைப் பசும்பொற்
றேட்டுப்
பூங்கமல பதத்தானை போருவிலைந்து காத்தனைப் போற்றல்செய்வாம்

மகாசிவராத்திரி மாசிமாத அபரபக்கச் சதுர்த்தசி இரவு நிகழ்கின்றது. இவ்விரதவியல் நித்திரையின்றி உபவாசமிருந்து, சிவபூசை, சிவாலயதரிசனம், சிவசரிதை சிவனடியார் சரிதைகள் படித்தல், ஆதியன இயைந்த இயைந்தவாறு செய்து புத்தியைப் புலன்வழிச் செல்லவிடாது தடுத்துச் சிவபெருமானைத் திரிகரணமுமொருமித்து வழிபடுதல் வேண்டும்.

இதன் மகிமை கற்பங்கள்தோறும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளுக்கேற்றவாறு பலப்பலவாகக் கூறப்பெறுகின்றது, பிரம விட்டுணுக்கள் படைத்தல் காத்தற்றொழில்களைச் செய்யும் பேறுபெற்றதும், தேவேந்திரன் தேவலோகத்தை ஆளப்பெற்றதும், இவ்விரதத்தை யநுட்டித்ததன் பயனேயாம். இன்னவாக வேனையோர் பலரும் பற்பல பேறுகள் பெற்றனரென்ப. கங்கையிற்படிந்தும், அந்தணர்க்கு இருநிதி முதலிய தானங்கள் வழங்கியும் அசுவமேதயாகங்களைச்செய்தும், வேறு பல விரதங்களை அநுட்டித்தும் சிவராத்திரி விரத அநுட்டானத்தாற் பெறும் பேற்றுக்கொதத பேறு பெறுதல் அரிதென

"கூறுநான் மறையோர்க்
கிருநிலம் பசும்பொற்குவைபசுக்
கோடிநல் கிடினும்—வேறுவே
றனைத்த விரதநோற்றிடினும்
விரியுளைப் புரவியின் வேள்வி—
நூறுசெய்திடினும் புரளவெண்
டரள நுரைத்திரை கொழிக்குங்
கங்கை—யாறமூழ்கிடினுஞ்
சிவநிசி நோற்போர் பெறுபய
னடைதன்மற் றரிதால்."

என்னுஞ் சிவராத்திரி புராணச் செய்யுளா லறிவுறுத்தப் பெறுதல் கூர்ந்து நோக்கவேண்டியது. உமாதேவியாரே ஒருகற்ப இறுதியிலே சிவபெருமானைப் பூசித்து, அவ்விராக் காலத்தைச் சிவராத்திரியெனப் புகன்று சிவபூசை செய்யும் மக்களுக்கு முத்திப்பேற்றையருளுதல் வேண்டுமென்று எம்மனோர் பொருட்டொப்பற்ற விரதத்தை வேண்டிப் பெற்றார் என்பதும் எம் உள்ளங்களில் உறுதியாய்க்கொள்ள வேண்டியது.

"மானுடப் பிறவிதானும் வகுத்தது மனம் வாக்காயம் ஆனிடத்தைந்துமாடும் அரன்பணிக்காக வன்றோ" என்னுஞ் சிவஞான சித்தித் திருவாக்குத்தரும் பொருளும் இவ்விடத்தில் இனிதுணரப் பெறுதலின் மானுடயாக்கையின் பெரும்பேறு இஃதேயெனக் கண்டு இவ்விரதத்தை யாவருமநுட்டித்துச் செவ்விய பயனைப் பெறுவோமாக.

"காலனுர் வீழத் தாக்குங்
கனைகழற் காலா போற்றி
மூலமாம் பொருளுக் கெல்லா
முழுமுதற்பொருளேபோற்றி
பாலநேத் திரனே போற்றி
படர்திரைப் பாலின் வேலை
யாலமுண் டிருண்ட கண்டத்
தண்ணலே போற்றி போற்றி."

### நன்றி ஏற்றல்

சீமாட்டி (Lady) இராமநாதன் அம்மையாரின் ஈமக்கிரியையின் போது சமுகந்தந்தும் பிரிவாற்று அநுதாபச் செய்திகள் அனுப்பியும், மலர்மாலைகளுதவியும்நன்றிகாட்டிய அன்பர்கள் அனைவருக்கும் திரு. சு. நடேசன் அவர்களும் பாரியாரும் நன்றி கூறுகின்றனர்.

M. 242 10—2—53.

### அறிவித்தல்

கொறளைப் பகுதி வைத்திய உத்தியோகத்தரில்லத்தில், திருமதி. P. சிவஞானரத்தினம் அவர்களது 804387 இலக்கங்கொண்ட சீவ உத்தரவாத உறுதிப்பத்திரம் காணாமற்போனதென இத்தால் அறிவித்தல் கொடுபடுகிறது. இப்பத்திரத்தின் இணைப்பிரதி கொடுபடக்கூடாதென இந் நாள் முதல் ஒரு மாத காலத்துள் தடை செய்யப்படாது விட்டால் இணைப்பிரதி ஒன்று கொடுபடும்.

L. S. வைத்தியநாதன்
அதிபர்.

பம்பாய்
3—2—53.

M. 244 10, 13—2—53.

# பழந் தமிழ்க் கழஞ்சியத்தில் ஒரு மணி

## பத்துப் பாட்டின் பண்பு

பத்துப் பாட்டில் அடங்கிய ஐந்து ஆற்றுப்படைகளிலும், புலவன், பொருநன், பாணன், கூத்தன் என்ற பல்கலைப் பெயர்களைக்கொண்டு பல அரசர்களைப் பாடியதாயிருந்தபோதிலும், இவை இவ்வரசர்களுக்கு அரசனாகிய முருகப் பெருமானையே மறைமுகமாய்ச் சுட்டிக் குறிக்கும். இதே கருத்திற்றான் முருகனை, 'புலவர் ஏறே பெரும்பெயர் முருக' என்றும் ('திருமுருகாற்றுப்படை') 'போர்மிகுபொருந' (மதுரைக்காஞ்சி) 'கொற்றவை சிறுவ' (நெடுநல்வாடை) 'மலைமகள் மகனே' (மலைபடுகடாம்) 'குழலன் கோட்டன், இசைபேர் ஆள (பாணாற்றுப் படைகள்) என்று இவைகளின் உள்ளீடாயுள்ள பொருள்களால், முருகனைத் துதித்தனர். அகப் பாட்டுக்களில் அகவழிபாடு சுட்டப்பட்டுள்ளது. ஆகவே, பண்டைத் தமிழர் சமய வழிபாடு முழுவதும், இப் பத்துப்பாட்டில் அமைந்துள்ளதென்று கருதுவதற்கிடமுண்டென்று மாத்திரம் இங்கு கூறுகின்றேன்.

— "தொண்டன்" —

பத்துப்பாட்டில் ஆராய்ச்சிக்குரிய பொருட்கள் பலவுள. திருமுருகாற்றுப்படையா? அல்லது புலவராற்றுப் படையா? திருவேரகம் என்னும் திருப்பெயர்பெற்ற ஊர் எது? அதிற் கூறப்படும் 'ஆறெழுத்து' எது? திருச்சீரலைவாயில் செவ்வேள் முருகப்பெருமானின் திருக்கை பன்னிரண்டிலும் உள்ள ஆயுதங்களின் தொழில் என்னை? அவை தனித்தும், இசைந்தும் இயங்குமா? திருஆவினன் குடியில், பதினொருமூவராகிய முப்பத்துமூவர் யாவர்? முருகனுக்கும் நூக் கண்ணனுக்கும் என்ன தொடர்பு. கூத்தராற்றுப் படை என்னும் பெயர் மூக்கியதா, மலைபடுகடாம் மூக்கியதா? கந்தழி என்பதற்கு உண்மைப் பொருள் என்னை? நக்கீரரின் குலம் என்னை? நச்சினார்க்கினியரின் பத்துப்பாட்டுரையில் எவை பொருத்தமில்லாதவை? பத்துப் பாட்டிலிருந்து, தமிழ் நாட்டுக்கும் மற்றைய நாடுகளுக்கும வாணிபம் எங்ஙனம் நடந்தது? இங்ஙனமாக, இசைக் கருவிகள், வானநூற் குறிப்புக்கள், சிற்பத்தின் அக்காலநிலை, அந்தணர் மரபு, பாண்டியனது வேப்பமாலை குறிக்கப்படுதல், மகளிர் விளக்கேற்றி வழிபடுதல், தலைவனுக்கும் தலைவிக்கும் மெய்யுறு புணர்ச்சி ஏற்படுங்காலம், கோயில் வழிபாடு, வேள்வியின் இலக்கணம், பத்துப் பாட்டிலுள்ள கடவுட் பெயர், இடப்பெயர் மாறுபட்டுள்ளவை, இவை போன்ற பல ஆராய்ச்சிகளுக்கு இடமாய் இருப்பது பத்துப்பாட்டு.

### மதிப்புரை

விரும்புவோர் தங்கள்
புத்தகங்களில்
இருபிரதிகள்
அனுப்புமாறு வேண்டுகிறோம்.

ப—ர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சிவராத்திரி வழிபாடு

நந்தன ஞூ மாசி மீ ௨௩ திகதி (12 2-53) வியாழக்கிழமை யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை ஆதரவில் ஷை சபையினது நாவலர் மண்டபத்தில் சிவராத்திரி வழிபாடு நடத்தப்பெறும்.

நிகழ்ச்சிகள்

நான்குயாமமும்
நடராசப்பெருமானுக்குப் பூசை
இரவு 9—10 தமிழ்மறையோதல்
10—11 வேதாத்தியயனம்
11— 1 பிரசங்கம்
சிவபரத்துவம்
திரு. வே. சோமசுந்தரம்
சிவராத்திரி மகிமை
பிரமஸ்ரீ
வ. மு. இரத்தினேசுவர ஐயர்
1 — 4 புராண படனம்
கந்தபுராணம் அடிமுடிதேடு படலம்

சைவாபிமானிகள் சமுகமளித்து இறைவனருளை அடைவார்களாக.

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்
சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம்
9—2—53.
M 245 10-2

## தமிழ்ப் பிரவேச, சமஸ்கிருத பிரவேச, பாலபண்டித வகுப்புக்கள்

யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கப் பரீட்சைக்குரிய ஷை வகுப்புக்கள், யாழ்ப்பாணம் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் 15 2-53 ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் ஒவ்வொரு சனி ஞாயிறு வாரங்களிலும், விடுமுறைக் காலங்களிலும் நடைபெறும். சேர்ந்து படிக்க விரும்புவோர் எமக்கு விண்ணப்பிக்க 15-2-53-ல் பள்ளிக்கூடத்தில் அறிந்துகொள்ளலாம்.

இப்பொழுது 17-1-53 தொடக்கம் தமிழ்ப் பாலபண்டித பண்டித வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

வி. முத்துக்குமாரு
மனேஜர்.

341. நாவலர்வீதி
யாழ்ப்பாணம்.
M. 243 10, 13—2 53

## விளம்பரம்

### நாவற்குளி கிராமச்சங்கம்

நாவற்குளி கிராமச் சங்கத் தலைவரால் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து வேலம்பிராய் அம்மன் கோவில் றோட்டு வேலை செய்வதற்கு 23-2-53 திங்கட்கிழமை மாலை 1 மணி வரை கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரங்கள் ஷை கந்தோரில் ரூபா 50/= கட்டியதின் பேரில் 21-2-53 மாலை 1மணி வரை பெறலாம்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் உறையில் இடப்பட்டு நன்றாக ஒட்டிச் சீல் வைத்து தலைவர், நாவற்குளி கிராமச் சங்கம், கைதடி என்ற விலாசமிட்டு உறையின் இடது பக்க மூலையில் "கேள்விகள்" எனக் குறித்து அனுப்பல் வேண்டும். ஏனைய விபரங்கள் ஷை சங்கக் கந்தோரில் அறிந்துகொள்ளலாம்.

குறிப்பு:- எந்த ஒப்பந்தத்தையும் ஏற்கவோ அன்றி நிராகரிக்கவோ தலைவருக்கு உரிமையுண்டு.

N. RAMALINGAM,
தலைவர் நாவற்குளி கிராமச்சங்கம்.
M, 240 10—2—53.

## அணிந்துரை அரங்கம்

### கணபதிபூசை

பிள்ளையாருடைய தத்துவ விளக்கமும் ஆராதனைப் பாட்டுகளும்.

ஆக்கியோன
சுத்தானந்தபாரதியார்
விலை சதம் 20

### கதிர்காமமாலை

கதிர்காமக் கந்தவேள் மீது யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் பாடிய பக்திப்பாடல்கள்.
விலை சதம் 15

### இன்பத் திருப்புகழ்

நடராசசிவம், பரமாத்மா முதலியவற்றைப் பொருளாகக்கொண்டு யோகி ஸ்ரீ சுத்தானந்தபாரதியார் பாடிய பாடல்கள். விலை சதம் 50

### நமது சமய விளக்கம்

பல சமயக் கொள்கைகளைக் குறிப்பாய்த் தொகுத்துக் கூறி சைவசமயத்தை விளக்குவது. யோகி ஸ்ரீ சுத்தானந்தபாரதியார் அவர்கள் இயற்றிய வசன வெளியீடு. விலை சதம் 50

## மறவன்புலோவில் காந்தியடிகள் தினம்

பெ. ஆ. சங்கம், ம. மு. சங்கம் ச. ச. நிலையம். இ. வா. சங்கம் என்பவற்றின் ஆதரவின்கீழ் மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலையில் 30-1-53 வெள்ளி பி. ப. 2-30 மணியளவில் திரு. க. வேலுப்பிள்ளை அவர்கள் தலைமையில் தேவார பாராயணத்துடன் காந்திதினக் கொண்டாட்டக் கூட்டம் ஆரம்பமாயது.

தலைவர் முன்னுரையின் பின் காந்தியடிகளின் வாழ்க்கைச் சிறப்புகளை விளக்கி மாணவ மாணவிகளும் ஆசிரியர்களும் சிறந்த சொற்பொழிவுகள் ஆற்றினர்கள். காந்தியடிகளைப்பற்றிய பக்திப் பாடல்களும் பாடப்பெற்றன. தலைவர் இறைவுரை நன்றியுரை என்பவற்றுடன் கொண்டாட்டம் நிறைவெய்தியது.

இவை நான்கும் சுத்தானந்த தபதிப்பகத்தாரால் அழகுற அச்சிட்டுவெளியிடப்பெற்றன.
பெறுமிடம்:
சுத்தானந்த பதிப்பகம் 60டில்
இடம்: கொழும்பு.

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

தங்கமாளிகை — நகைகள் கிடைக்குமிடம்

நகைகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
=0=

தந்தி: "JEWELLERS"
போன்: 161

கிளைத்தானம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.

## பிரகடனம்:

திருவாதவூரடிகள்புராணம் உரையாசிரியர்: ம. க. வேற்பிள்ளையவர்கள் செய்த பொழிப்புரையுடன் விலை ரூபா 2-00

பிரதோஷவிரதமான்மியம் (புதியபதிப்பு) சிவவிரதங்களுட் சிறந்ததாகிய இவ்விரத காலத்திற் சுவாமி கும்பிடவேண்டிய ஒழுங்கு இதனை அநுட்டிக்கவேண்டிய முறை, புத்திபூர்வமாகவும் அபுத்திபூர்வமாகவும் அநுட்டித்தோர் பெற்றபேறு முதலியவற்றை இனிய தமிழ் வசன நடையில் விளக்குவது; விலை சதம் 40

அரிச்சந்திரபுராணம் - மயானகாண்டம் மேற்படி பண்டிதர் எழுதிய பொழிப்புரை இலக்கணக்குறிப்பு நூலாசிரியர்வரலாறு முதலியவற்றுடன் உயர்தரவகுப்புக்களுக்குச் செய்யுட்பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது விலை சதம் 75.

மாணிக்கவாசகசுவாமிகள் சரித்திரம் திருவாசகத்திரட்டுடன் மேற்படி பண்டிதர் எழுதியது; கொழும்பு விவேகாநந்தசபையார் நடத்தும் சைவசமயபாடப்பரீட்சை மேற்பிரிவிற்குப் பாடமாக விதிக்கப்பட்டது விலை ரூ. 1—20 ச.

உலகம்பலவிதக்கதை 1. (கோபாலநேசரத்தினம்) ஷை பண்டிதர் எழுதியது. படிக்கப்படிக்கத்தெவிட்டாதது. விலை ரூ. 1—25

ஈழமண்டலசதகம்: ஆசிரியர் ம. க. வேற்பிள்ளை இயற்றியது இலங்கையின் மான்மியத்தை எடுத்துவிளக்குவது; விரிவுரையுடன் விலை ரூ 1·00

சைவசமயசாரம்: ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம்(B.A.) அவர்கள் எழுதியது. கொழும்பு விவேகானந்தசபையார் நடத்தும் சைவசமயப் பரீட்சைப் பாடங்களுளொன்றாயுள்ளது. விலை ச 45

"ஆறுமுகநாவலர்" (ஆங்கிலத்தில்) சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் (B. A.) எழுதியது; ஆங்கிலமறிந்தோர் எவரும் படிக்கத்தக்கது. முந்தி வெளிவராதது. விலை 60 சதம் (அணா 10)

புலியூர் (யமக)அந்தாதி மாதகல் மயில்வாகனப்புலவர்இயற்றியது ஆசிரியர் ம. க. வேற்பிள்ளைசெய்த உரையுடன் விலை சதம் 50

முற்பணமனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும்.

Apply: to PANDIT [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த கொழுக்கி ஓடுகள்

பேசல் மிசன் கோட்டை மார்க் இரட்டைப் பிலி கொழுக்கி ஓடுகளே மற்றை எல்லா ஓடுகளிலும் சிறந்தவை. எப்படி மழை பெய்தாலும் ஒழுகமாட்டா. வெயில் மழைகளினால் பழுதுபடாது நீடித்தகாலம் பாவிக்கக் கூடிய திண்மை உடையன!

கிடைக்குமிடம்:
வில்லிய மேதர் சன்ஸ்,
சோல் ஏஜென்ஸ்,
யாழ்ப்பாணம்.
[M. 225 23—24 4-53.]

திறமான
தேக்க மரங்கள்
பல திணிசுகளிலும்

திறமான
ருணிமார்க் ஓடுகள்
13¾, 14 இஞ்சிகளிலும்

வந்திருக்கின்றன.

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
Std. 2 ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி
1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா]
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்களை வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாறத்தக்க [illegible] பகுதியிலுள்ள [illegible] விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியா [illegible] வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் [illegible] (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாக கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
Std. 14 20-11-40—20-11-49. சிறுப்பர்.

சூதக வயிற்றுவலி சொல்லாமலே மறையும்.

கர்ப்ப எண்ணெய்
:: உபயோகியுங்கள் ::

மாத விலக்குக் காலங்களில் உண்டாகிற சூதகக்கட்டு, இடுப்புவலி, சூத்தோடுகூடிய சூதகம், கை கால் குடைச்சல், மலக்கம், கர்ப்பச்சிதைவு, அகாலப் பிரசவம் முதலியவைகளைக் குணப்படுத்தி மாத விலக்கைக் கிரமப்படி வெளியேற்றிக் கர்ப்பமுண்டாக்குகிறது.

● புட்டி ஒன்றுக்கு விலை ரூ. 3-0-0 ●

ஏஜண்டு:- S. பொன்னுச்சாமிபிள்ளை,
133, தும்பகொடா தெரு, பலாங்கொடை, (ௗ)

தலைமைஆபீஸ் மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி, S.I.

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. Lond) residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai Jaffna, at their Press, the Saiva Prakasa Press. Vannarponna, Jaffna on Tuesday February 10 1953